முருகப்பெருமான் துணை

**மகான் சாக்கியர் நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.02.2023**, செவ்வாய்க்கிழமை

1. பாரப்பா அரங்கன் தருமத்தை
   பசிபிணி விரட்டும் சித்தியாக
   கூறப்பா அரங்க நாமத்தை
   குலமே விளங்கும் மகத்துவமாக
2. ஆகவே அரங்கன் அவதார
   அற்புத மகிமைதனை கூறி
   வகைபட சுபகிருது சால் திங்கள்
   வரமென மூவையோர்திகதி குசன் வாரம்
   **(சுபகிருது வருடம் மாசி மாதம் 16ம் நாள், 28.02.2023 செவ்வாய்க்கிழமை)**
3. வாரமதில் அனுகூல ஆசிதனை
   வழங்குவேன் சாக்கியர் யானும்
   சோரமிலா அரங்கன் படைகள்
   சுத்த சைவ நெறிகள் ஏற்று
4. ஏற்றுமே தன்குடி மக்களென
   எல்லாம் மறந்து அரங்கன்மேல்
   பற்றுவைத்து மாதருமம் தனை
   பணிவோடு பாதுகாப்பாய் செய்கின்ற
5. செய்கின்ற மேன்மையுளம் கொண்ட
   சிறப்பான தொண்டர்படைகளை
   அய்யமறக் கொண்ட அரங்கனே
   அகிலம் மாற்றும் மகா ஞானி
6. ஞானியரின் அவதார நோக்கில்
   நம்பிக்கை வைத்து சேவை ஆற்றும்
   கனிவுமிக்க கடைநிலையிலுள்ள
   கட்டங்களிலுள்ள தொண்டர்கட்கும்
7. தொண்டர்கட்கும் மீட்பு உண்டுஉண்டு
   தேசிகனார் ஆசி உள்ளிருந்து
   தொண்டரோடு அவன் குடியும்
   தொண்டும் சிறக்க பரிபூரண ஆசியும்
8. ஆசியும் பாதுகாப்பும் உண்டுஉண்டு
   அளவிலா அவரவர் சேவையும்
   ஆசிதந்து அரங்கன் சக்திக்குள்
   அனுமதிகப்பட்டு பதிவு ஏற்றுவர
9. வருகவே இந்த சேவை நிலை
   வளரவளர சரணாகதி பெருக
   முருகப்பெருமான் அருளாசியும்
   முழுமை ஞானமும் இலகுவாய்கிட்டி

10. கிட்டியே எளிய நிலை கடைநிலைஎன
கிடப்பவரும் மேல்நிலைக்கு வந்து
தட்டாது அவர்கள் மூலமே
தவராஜன் அற்புதம் புரிவாரப்பா

11. அப்பனே அரங்கனிடம் கிடைத்த
அனைத்து வாய்ப்பையும் அன்பர்கள்
ஒப்புக்கொண்டு அலட்சியம் கொள்ளா
ஓங்காரம்பட சேவை ஆற்றவே நிலை உயர்வர்

அனுகூல ஆசி முற்றே

–சுபம்–